செ.வெ.எண். 02 நாள்: 01.10.2019

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2018-2019- ஆண்டு, 94- இரத்த தான முகாம் நடைபெற்றது.**

**6,735 யூனிட் இரத்தம் சேகரிக்கப்பட்டு உயிர் காக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது**

**சிறந்த இரத்தான முகாம் அமைப்பாளர்கள் 52- நபர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி அவர்கள் பாராட்டு சான்றிதலை வழங்கி தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேசிய தன்னார்வ இரத்ததான தினம் அக்டோர் 1- கடைபிடிப்பதையொட்டி, 2018-19- ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிற்பான முகாம் அமைத்த தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோருக்கு பாராட்டு சான்றிதலை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி அவர்கள் இன்று ( 01.10.2019) வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு நலப்பணிகள் இணை இயக்குநர் டாக்டர். பரமசிவன் அவர்கள் முன்னிலை வகித்தார். மாவட்ட எயிட்ஸ் கட்பாடு அலகு மேற்பார்வையாளர் திரு. சி.அருள் அனைவரையும் வரவேற்றார்.

**பின்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசும் பொழுது:**

தானத்திலேயே சிறந்த தானம் இரத்த தானமாகும். விபத்து மற்றும் அறுவை சிகிச்சைகள் மற்றும் பிரசவ காலங்களில் நோயாளிகளுக்கு இரத்தம் மிகவும் அவசியமாகிறது. போர்கால அடிப்படையில் இரத்தம் தேவைபடுவோருக்கு உடனடியாக இரத்தம் வழங்கும் கொடையாளர்கள் மற்றும் முகாம் அமைத்த தொண்டு நிறுவனங்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு நமது மாவட்டத்தில் 94- இரத்த தான முகாம் நடைபெற்றது. அவற்றில் 6,735 யூனிட் இரத்தம் சேகரிக்கப்பட்டு உயிர் காக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு உறுதுணையாக இருந்த கல்லூரி, தொண்டு நிறுவனங்கள், மற்றும் தொழில் நிறுவனங்கள் சேவை மிகவும் பாராட்டுகுரியது. மென்மேலும் இச்சேவை பணிகளை சிறப்பாக செயல்படுத்த வேண்டு மென மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி அவர்கள் உரையாற்றினார்.

தொடர்ந்து சிறந்த இரத்தான முகாம் அமைப்பாளர்கள் 52- நபர்களுக்கு பாராட்டு சான்றிதலை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு தலைமை மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவ அலுவலர் டாக்டர். நாராயணசாமி, எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு திட்ட மேலாளர் டாக்டர் வெண்ணிலா, மற்றும் தொழிற் நிறுவன பிரதிநிதிகள், ரெட்கிராஸ் அமைப்பு பிரதிநிதிகள், அரசு ஆடவர் கல்லூரி, தொழிற்நுட்ப கல்லூரி பேராசிரியர்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், உதிரும் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.